**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.241/2002**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on12.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மனோகரன் Father's Name : தர்மலிங்கம்

துவக்க நேரம் : 03.46 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Com படித்துள்ளேன். நான் என்ன பணிசெய்து வருகிறேன் என்றால் அரசு ஊழியராக பணிஓய்வு பெற்று, தற்பொழுது வீட்டில் இருந்து வருகிறேன். நான் எந்த துறையில் பணிபுரிந்தேன் என்றால் வணிகவரித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். என்ன நிலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றால் அதைப் பற்றி கூற எனக்கு விருப்பம் இல்லை. 2-ம் வாதி சுப்ரமணியன் என்பவர் என்ன பணிபுரிந்தார் என்றால் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் பணிபுரிந்தார். அவர் என்ன நிலையில் பணிபுரிந்தார் என்றால் எனக்கு தெரியாது.

2) எனக்கு தாவா சொத்தை தவிர தாவா சொத்தை சுற்றிலும் சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்துக்கு அருகில் ரைஸ் மில் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் இல்லை, தாவா சொத்திலிருந்து ¾ கிலோமீட்டர் தூரத்தில் எனது உறவினர் ரைஸ் மில் நடத்தி வருகிறார். மேற்படி ரைஸ் மில் எனக்கு சொந்தமான நிலத்தில் உள்ளது என்றால் இல்லை. நான் இந்த வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரை மற்றும் கூடுதல் எதிருரையில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் படித்துப்பார்த்தேன்.

3) நான் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்குரையை திருத்தம் செய்துள்ளேனா என்றால் இல்லை. ச.எண்.86/1-ல் போர்வெல் அமைந்துள்ளதாகதான் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ச.எண்.86/5 என்பது பிரதிவாதிகளுக்கு உரிமையான நிலம் என்றால் சரியல்ல, 1-ம் பிரதிவாதி அந்த நிலத்தில் பயிர் செய்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விவரத்திலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கு சொத்தானது அம்பாயிரம் நிலத்திற்கு மேற்கிலும், வடக்கிலும் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான், வருவாய் ஆவணங்களில் 1-ம் பிரதிவாதி பெயர் இடம்பெற்றிருந்ததால் நான் அவ்வாறு குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4) தாவா சொத்தான ச.எண்.86/1-ல் உள்ள நிலம் ச.எண்.86/5 நிலத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ச.எண்.86/1-ற்கு கிழக்கில் உள்ள கம்பிவேலிக்கு கிழக்கில் ச.எண்.86/5-ன் நிலம் உள்ளது என்றால் அங்கு கம்பிவேலி எதுவும் இல்லை. ச.எண்.86/1-ற்கு கிழக்கில் ச.எண்.86/5-ன் நிலம் உள்ளது. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆணையர் அறிக்கை Ex.C1 -ல் 6-வது பத்தியில் கம்பிவேலி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பழைய, புதிய கம்பிகளுடன் கம்பிவேலி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கம்பிவேலியானது நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வதற்கு முன்புதான் அமைக்கப்பட்டுள்ளது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.241/2002, Dt.12.08.2025.

5) என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்திலும் Ex.C2-லும் தென்வடலாக கம்பிவேலி காட்டப்பட்டுள்ளது என்றால் அங்கு அமைந்துள்ள வீடு வரை மட்டுமே கம்பிவேலி இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் எந்த ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ச.எண்.86/1 என்பது ச.எண்.86/1A,1B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.86/1A, 1B ஆகியவற்றில் எந்த சர்வே எண்ணில் போர் வெல் அமைந்திருப்பதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சுமார் 1 வருடத்திற்கு முன்புதான் ச.எண்.86/1-ஆனது உட்பிரிவு செய்யப்பட்டது அதனால் நான் வழக்கு தாக்கல் செய்தபோது அதை குறிப்பிட வாய்ப்பில்லை. தற்பொழுது உட்பிரிவு செய்யப்பட்டபோதிலும் அதனை திருத்தம் செய்ய வேண்டி வழக்கில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

6) நான் இந்த வழக்கில் புலவரைபடத்தின் அடிப்படையில் சர்வேயர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்தின் இயற்கை அமைப்பை பார்வையிட வேண்டி மனு தாக்கல் செய்தேன். பிரச்சினைக்குரிய போர்வெல் தாவா சொத்தின் எந்த திசையில் அமைந்துள்ளது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் பிரதிவாதிகள் மேற்படி போர்வெல் தொடர்பாக தொந்தரவு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரிதான் வழக்கு தாக்கல் செய்திருந்தோம்.

7) தாவா சொத்தை சர்வேயர் மூலம் துல்லியமாக அளவீடு செய்தால் போர்வெல் ச.எண்.86/5-ல் அமைந்துள்ள விவரம் தெரிந்துவிடும் என்ற காரணத்தால்தான் நீதிமன்ற ஆணையர் புலவரைப்படத்தின் அடிப்படையில் அளவீடு செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, மேற்படி ச.எண்.86/5-ல் உள்ள நிலமானது பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலம் இல்லை என்பதால்தான் அந்த நடவடிக்கை நான் மேற்கொள்ளவில்லை.

தற்பொழுது நீதிமன்ற ஆணையர் நியமித்து சர்வேயர் மூலம் ச.எண்.86/1 நிலத்தை அளவீடு செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

8) நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.6-ல் போர்வெல் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் கடந்த 01.09.2002-ல் பைப்லைன், ஆழ்துளை கிணறு, வரப்பு மற்றும் பயிர்களை சேதப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 01.09.2002 அன்று நடந்த சம்பம் குறித்து காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் புகார் கொடுத்து CSR வாங்கினேன் ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் கடந்த 01.09.2002 அன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால்தான் அதுகுறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9) நான் சொல்வதுபோல் தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு, பைப்லைன் இல்லை என்பதால்தான் அதனை சேதப்படுத்தியதிற்கான புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆவணங்கள் 1, 2 தாவா சொத்தின் தொடர்புடைய ஆவணங்கள் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின்படி கம்பிவேலிக்கு கிழக்குபுறத்தில் உள்ள பிரதிவாதிகள் நிலத்தில்தான் போர்வெல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சரியான அமைப்புகளுடன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த காரணத்தினால்தான் அதற்கு எவ்வித ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தவறு.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.43 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.241/2002, Dt.12.08.2025.